# المجموعة
من الادعية
# المأثورة

# பிரார்த்தனைத் தொகுப்பு

Era of Appearance Foundation
مؤسسة عصر الظهور
www.thohor.com

الطبعة الأولى
1431هـ - 2010م

بسم الله الرحمن الرحيم

# முன்னுரை

அல்லாஹ்வுக்கு மிகப் பிரியமான அமல்களில் துஆவும் ஒன்றாகும். இது அல்லாஹ்வுக்கும் அடியானுக்கும் இடையிலான திரைகளை அகற்றி, அன்புப் பிணைப்பையும் நல்லுறவையும் ஏற்படுத்துகின்றது.

இம்மையிலும் மறுமையிலும் பயனளிக்கக் கூடிய சிறந்த அமலாக இது விளங்குகின்றது. இதனாலேயே இஸ்லாம், துஆவுக்கு தனது பாரம்பரியங்களில் அதிக முக்கியத்துவம் கொடுத்துள்ளது.

பெருமானார் (ஸல்) அவர்கள் துஆவில் ஈடுபடும்படியாக மக்களை பணித்ததோடு, அதற்கான வழிமுறைகள், ஒழுங்குமுறைகளையும் கற்றுத் தந்துள்ளார்கள்.

ஒரு முஃமினுடைய வாழ்வில் துஆ முக்கியத்துவம் பெறுகின்றமைக்கு, அது ஏகத்துவத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளமையே காரணம் எனலாம். ஏனெனில், துஆ என்பது அல்லாஹ்வினது வல்லமைக்கும், அவனது தயாளத்திற்கும், அன்புக்கும் மாத்திரமன்றி, அவனது நிரந்தரமான ஏகத்துவ நிலைக்கும் சிறந்த சான்றாக விளங்குகின்றது.

**அல்ஹுதா பப்ளிகேஷன்ஸ்**
*கொழும்பு.*

தன் தவறுகளை உணர்ந்து
தௌபாச் செய்து
தூய மனத்துடன் வாழ முனையும்
அனைத்து உள்ளங்களுக்கும்
இப்பிரார்த்தனைத் தொகுப்பு
சமர்ப்பணம்

بسم الله الرحمن الرحيم

قال الله تعالى (عز وجل)

وَمَنْ اَحْسَنُ قَوْلاً مِمَّنْ دَعَا اِلَى اللهِ وَعَمِلَ صَالِحًا وَقَالَ اِنَّنِـــى
مِنَ الْمُسْلِمِيْنَ . (فصلت ٣٣)

அல்லாஹ்வின்பால் மக்களை அழைத்து, நற்கருமங்களையும் செய்து, நிச்சயமாக நான் முஸ்லிம்களில் உள்ளேன் என்றும் கூறுகின்றாரே, அவரைவிட அழகான வார்த்தை கூறுபவர் யார்?

وَاِذَا سَاَلَكَ عِبَادِى عَنِّـــى فَاِنِّـــى قَرِيْبٌ اُجِيْبُ دَعْوَةَ الدَّاعِ اِذَا
دَعَانِ . (البقرة ١٨٦)

(நபியே!) உம்மிடம் என்னுடைய அடியார்கள் என்னைப் பற்றிக் கேட்டால், நிச்சயமாக நான் அவர்களுக்கு மிகச் சமீபமாகவே இருக்கின்றேன். எவரும் என்னை அழைத்தால் அவ்வழைப்பாளியின் அழைப்புக்கு நான் பதிலளிப்பேன்.

وَقَالَ رَبُّكُمُ ادْعُوْنِى اَسْتَجِبْ لَكُمْ (الغافر ٦٠)

உங்களது இரட்சகன் கூறுகின்றான்: நீங்கள் என்னையே அழைத்துப் பிரார்த்தியுங்கள். நிச்சயமாக நான் உங்களுடைய அழைப்புக்குப் பதிலளிப்பேன்.

وَلِلّٰهِ الْاَسْمَاءُ الْحُسْنَـــى فَادْعُوْهُ بِهَا

அல்லாஹ்வுக்கு அழகிய திருநாமங்கள் இருக்கின்றன. அவற்றினால் அவனை அழைத்துப் பிரார்த்தியுங்கள்.

وَهُوَ الْحَيُّ لَاۤاِلٰهَ اِلَّا هُوَ فَادْعُوْهُ مُخْلِصِيْنَ لَهُ الـــدِّيْنَ (الغافر ٦٥

(அல்லாஹ்வாகிய) அவன் என்றும் உயிரானவன். அவனைத் தவிர வணக்கத்திற்குரியோன் வேறுயாருமில்லை. ஆகவே, நீங்கள் முற்றிலும் தூய மனத்துடன் அவனை அழைப்பீர்களாக. ஏனெனில், வழிபாடு அவனுக்கேயுரியது.

## قال رسول الله (صلى الله عليه وآله وسلم)

اِنَّ الدُّعَاءَ هُوَ الْعِبَادَةُ (الترمذى)

நிச்சயமாக துஆ என்பது வணக்கமாகும்.

لَيْسَ شَيْئٌ اَكْرَمَ عَلَى اللهِ مِنَ الدُّعَاءِ (الترمذى)

துஆவை விட அல்லாஹ்வை சங்கைப்படுத்தக் கூடியது வேறெதுவுமில்லை.

اَلدُّعَاءُ مُخُّ الْعِبَادَةِ ، وَلَا يُهْلِكُ مَعَ الدُّعَاءِ اَحَدٌ (بحار الانوار)

துஆ என்பது வணக்கங்களின் மூளையாகும்.
துஆவுடன் இருக்கும் வரை எவரும் அழிவுக்குள்ளாக்கப்பட மாட்டார்கள்.

اِنَّ رَبَّكُمْ حَيٌّ كَرِيْمٌ يَسْتَحْيِى مِنْ عَبْدِهِ اِذَا رَفَعَ يَدَيْهِ اِلَيْهِ اَنْ يَرُدَّهُمَا صِفْراً (النسائى)

உங்களது இரட்சகன் சங்கையான ஒரு ஜீவனாவான். தனது அடியார்கள் தன்னிடம் யாசித்துக் கைகளை ஏந்துகின்ற போது, அவற்றை வெறும் கைகளாகத் திருப்பிவிடுவதற்கு அவன் வெட்கப்படுகிறான்.

اِنَّ اَعْجَزَ النَّاسِ مَنْ عَجَزَ عَنِ الدُّعَاءِ (البحار)

நிச்சயமாக மனிதர்களில் மிகவும் இயலாமைக்குரியவன், துஆ செய்வதற்கு இயலாதவனாவான்.

اَفْضَلُ الْعِبَادَةِ الدُّعَاءُ (كنز العمال)

வணக்கங்களில் மிகச் சிறந்தது துஆவாகும்.

# அல்குர்ஆனின் துஆக்கள் சில

رَبَّنَا آتِنَا فِى الدُّنْيَا حَسَنَةً وَفِى الْآخِرَةِ حَسَنَةً وَقِنَا

عَذَابَ النَّارِ (البقرة ٢٠١)

எங்கள் இரட்சகனே! எங்களுக்கு இம்மையிலும் நல்லதையே தருவாயாக. மறுமையிலும் நல்லதையே தருவாயாக. நரகநெருப்பின் வேதனையிலிருந்தும் எம்மைப் பாதுகாப்பாயாக.

رَبَّنَا اَفْرِغْ عَلَيْنَا صَبْرًا وَثَبِّتْ اَقْدَامَنَا وَانْصُرْنَا عَلَى الْقَوْمِ

الْكَافِرِيْنَ (البقرة ٢٥٠)

எங்கள் இரட்சகனே! எங்கள் மீது பொறுமையைச் சொரிவாயாக. எங்கள் பாதங்களை உறுதிப்படுத்தி வைப்பாயாக. நிராகரிக்கும் இந்த ஜனங்கள் மீது வெற்றி பெற எமக்கு உதவி புரிவாயாக.

رَبَّنَا اغْفِرْلَنَا وَلِاِخْوَانِنَا الَّذِيْنَ سَبَقُوْنَا بِالْاِيْمَانِ وَلَاتَجْعَلْ

فِى قُلُوْبِنَا غِلاًّ لِلَّذِيْنَ آمَنُوا رَبَّنَا اِنَّكَ رَؤُوْفٌ رَحِيْمٌ .

(الحشر ١٠)

எங்கள் இரட்சகனே! எங்களையும் எங்களுக்கு முன் விசுவாசங் கொண்ட எங்களுடைய சகோதரர்களையும் நீ மன்னித்தருள்வாயாக. விசுவாசங் கொண்டவர்களைப் பற்றி எங்களுடைய உள்ளங்களில் குரோதங்களை உண்டுபண்ணி விடாதே. எங்கள் இறைவனே! நிச்சயமாக நீ மிக்க கிருபை யுடையோனும். இரக்கமுடையோனுமாக இருக்கின்றாய்.

## துஆவின் ஒழுங்குகள் சில

* துஆ கேட்க ஆரம்பிக்கு முன் உடலைச் சுத்தப்படுத்தி வுழு செய்து கொள்ளல்.
* கிப்லாவின் திசையை முன்னோக்குதல்.
* உள்ளத்தை அல்லாஹ்வின் பக்கம் திருப்பி சிந்தனை முழுவதையும் துஆவிலேயே ஒருங்கிணைத்தல்.
* ஹராமான உணவுகளை முற்றாகத் தவிர்ந்து கொள்ளல்.
* அல்லாஹ்வைப் பற்றிய அறிவுடனும் அவன் மீது பரிபூரண நல்லெண்ணத்துடனும் பிரார்த்தித்தல்.
* அல்லாஹ்வைப் புகழ்ந்து பெருமானார் நபி (ஸல்) அவர்கள் மீதும் அவர்களது குடும்பத்தினர் மீதும் ஸலவாத். ஸலாம் ஓதிக் கொள்ளல்.
* துஆ கேட்கின்ற போது கண்ணீர் விட்டு அழுதல். அல்லது அழுவதற்கு முயற்சித்தல்.
* செய்த பாவங்களை நினைவு கூர்ந்து. அவற்றை அல்லாஹ்விடம் முறையிட்டு. அவற்றுக்காக பாவமன்னிப்புக் கோருதல்.
* உடல் ஆரோக்கியத்தை தருமாறு அல்லாஹ்விடம் அதிகம் பிரார்த்தித்தல்.
* ஒவ்வொரு தேவையையும் தெளிவாக முறையிட்டு அவற்றை அல்லாஹ்விடம் ஒப்புவித்தல்.
* சமூகத்தை மையப்படுத்திய பொதுவான பிரார்த்தனைகளுக்கு முன்னுரிமை வழங்குதல்.
* நபி (ஸல்) அவர்கள் மீதும் அவர்களது குடும்பத்தினர் மீதும் ஸலவாத் கூறி. அல்லாஹ்வைப் புகழ்ந்து துஆவை நிறைவு செய்து கொள்ளல்.

دعاء كميل

بسم الله الرحمن الرحيم

اَللّٰهُمَّ اِنِّى اَسْئَلُكَ بِرَحْمَتِكَ الَّتِى وَسِعَتْ كُلَّ شَيْءٍ

அல்லாஹ்வே! எல்லாப் பொருட்களையும் சூழ்ந்துள்ள உனது பேரருளினைக் கொண்டு நான் உன்னிடம் இரைஞ்சுகின்றேன்

وَبِقُوَّتِكَ الَّتِى قَهَرْتَ بِهَا كُلَّ شَيْءٍ

அனைத்தையும் அடக்கியாளும் உனது வல்லமையைக் கொண்டும்

وَخَضَعَ لَهَا كُلُّ شَيْءٍ

அவையனைத்தும் உனது வல்லமைக்குப் பணிந்து விட்டன.

وَذَلَّ لَهَا كُلُّ شَيْءٍ

அவையனைத்துமே தாழ்ந்ததாகி விட்டன.

وَبِجَبَرُوْتِكَ الَّتِى غَلَبْتَ بِهَا كُلَّ شَيْءٍ

யாவற்றையும் மிகைத்து விட்ட உனது அதிகாரத்தைக் கொண்டும்

وَبِعِزَّتِكَ الَّتِى لاَيَقُوْمُ لَهَا شَيْءٌ

தன்னிகரற்ற உனது கண்ணியத்தைக் கொண்டும்

وَبِعَظَمَتِكَ الَّتِى مَلأَتْ كُلَّ شَيْءٍ

யாவற்றையும் நிரப்பமாக்கிய உனது மகாத்மியத்தைக் கொண்டும்

وَبِسُلْطَانِكَ الَّذِى عَلاَ كُلَّ شَيْءٍ

அனைத்தையும் மிகைத்து விட்ட உனது அரசாட்சியைக் கொண்டும்

وَبِوَجْهِكَ الْبَاقِي بَعْدَ فَنَاءِ كُلِّ شَيْئٍ

எல்லாமே அழிந்த பின் எஞ்சியிருக்கும் உனது திருமுகத்தைக் கொண்டும்

وَبِاَسْمَائِكَ الَّتِي مَلأَتْ اَرْكَانَ كُلِّ شَيْئٍ

எல்லாப் பொருட்களினதும் அடிப்படையில் நிரம்பிவிட்ட உனது அழகுத் திருநாமங்களைக் கொண்டும்

وَبِعِلْمِكَ الَّذِي اَحَاطَ بِكُلِّ شَيْئٍ

அனைத்தையும் அவதானிக்கின்ற உனது பேரறிவினைக் கொண்டும்

وَبِنُوْرِ وَجْهِكَ الَّذِي اَضَاءَ لَهُ كُلُّ شَيْئٍ

அனைத்தையும் பிரகாசமடையச் செய்யும் உனது திருமுகப் பேரொளியைக் கொண்டும் இரைஞ்சுகின்றேன்..

يَانُوْرُ يَاقُدُّوْسُ يَااَوَّلَ الاَوَّلِيْنَ وَيَاآخِرَ الآخِرِيْنَ

ஒளிமயமானவனே, தூய்மையானவனே, அனைத்திற்கும் ஆரம்பமானவனே, இறுதியானவனே!

اَللّٰهُمَّ اغْفِرْ لِيَ الذُّنُوْبَ الَّتِي تَهْتِكُ الْعِصَمَ

அல்லாஹ்வே! உனது பாதுகாவலை தகர்த்தெறியக் கூடிய எனது பாவங்களை மன்னிப்பாயாக.

اَللّٰهُمَّ اغْفِرْ لِيَ الذُّنُوْبَ الَّتِي تُنْزِلُ النِّقَم

வேதனைகளை இறக்கிவைக்கக்கூடிய எனது பாவங்களை மன்னிப்பாயாக.

اَللّٰهُمَّ اغْفِرْ لِيَ الذُّنُوْبَ الَّتِي تُغَيِّرُ النِّعَمَ

அருட்கொடைகளை அழித்துவிடும் எனது பாவங்களை மன்னிப்பாயாக.

اَللّٰهُمَّ اغْفِرْ لِيَ الذُّنُوْبَ الَّتِى تَحْبِسُ الدُّعَاءَ

பிரார்த்தனைகளைத் தடுத்து விடும் எனது பாவங்களைப் பொறுத்தருள்வாயாக.

اَللّٰهُمَّ اغْفِرْ لِيَ الذُّنُوْبَ الَّتِى تَقْطَعُ الرَّجَاءَ

எதிர்பார்ப்பைத் துண்டித்துவிடும் எனது பாவங்களைப் பொறுத்தருள்வாயாக.

اَللّٰهُمَّ اغْفِرْ لِيَ الذُّنُوْبَ الَّتِى تُنْزِلُ الْبَلَاءَ

சோதனைகளை இறக்கிவைக்கும் எனது பாவங்களை மன்னிப்பாயாக.

اَللّٰهُمَّ اغْفِرْ لِى كُلَّ ذَنْبٍ اَذْنَبْتُهُ وَكُلَّ خَطِيْئَةٍ اَخْطَأْتُهَا

நான் செய்த ஒவ்வொரு பாவத்தையும் தவறையும் மன்னிப்பாயாக.

اَللّٰهُمَّ اِنِّى اَتَقَرَّبُ اِلَيْكَ بِذِكْرِكَ وَاَسْتَشْفِعُ بِكَ اِلَى نَفْسِكَ

அல்லாஹ்வே! உன்னை தியானிப்பதன் மூலம் நான் உன்னை நெருங்குகிறேன். உன்னைக் கொண்டே உன்னிடம் சிபாரிசு செய்கின்றேன்.

وَاَسْئَلُكَ بِجُوْدِكَ اَنْ تُدْنِيَنِى مِنْ قُرْبِكَ

உனது தயாளத்தின் மூலம் நீ என்னை உனக்கு நெருக்கமாக்கிக் கொள்ளும்படி பிரார்த்திக்கிறேன்.

وَاَنْ تُوزِعَنِى شُكْرَكَ

உனக்கு நன்றிசெலுத்தும் பண்பை வழங்குபடியும்

وَاَنْ تُلْهِمَنِى ذِكْرَكَ

உன்னை தியானிக்க உணர்வூட்டும்படியும் யாசிக்கின்றேன்.

اَللّٰهُمَّ اِنِّى اَسْئَلُكَ سُؤَالَ خَاضِعٍ مُتَذَلِّلٍ خَاشِعٍ اَنْ

تُسَامِحَنِى وَتَرْحَمَنِى

உன்னை அடிபணிந்து தொழுது உன்னிடம் இரைஞ்சிக் கேட்கின்றேன். என்னை மன்னித்து அருள்புரிவாயாக.

وَتَجْعَلَنِى بِقِسْمِكَ رَاضِيًا قَانِعًا وَفِى جَمِيْعِ الْاَحْوَالِ

مُتَوَاضِعًا

உனது பங்குவைப்பை தன்னிறைவோடு பொருந்திக் கொண்டவனாகவும், எல்லாவற்றிலும் பணிவடக்கம் உடையவனாகவும் என்னை ஆக்குவாயாக.

اَللّٰهُمَّ وَاَسْئَلُكَ سُؤَالَ مَنِ اشْتَدَّتْ فَاقَتُهُ وَاَنْزَلَ بِكَ عِنْدَ

الشَّدَائِدِ حَاجَتَهُ وَعَظُمَ فِيْمَا عِنْدَكَ رَغْبَتُهُ

அல்லாஹ்வே! நெருக்கடி வேளையில் உன்னிடம் அதிக தேவையுள்ளவனாக இரந்து கேட்கிறேன். உன்னிடத்தில் உள்ளவற்றின் மீது தேவை அதிகரித்துவிட்டது.

اَللّٰهُمَّ عَظُمَ سُلْطَانُكَ وَعَلاَ مَكَانُكَ وَخَفِىَ مَكْرُكَ

وَظَهَرَ اَمْرُكَ

அல்லாஹ்வே! உனது அரசாட்சி மகத்துவம் வாய்ந்தது. உனது அந்தஸ்து உயர்ந்தது. உனது திட்டம் மறைந்து உனது சட்டம் வெளியாகியுள்ளது.

وَغَلَبَ قَهْرُكَ وَجَرَتْ قُدْرَتُكَ

உனது அதிகாரம் மிகைத்து, உனது சக்தி நிலைத்து விட்டது.

وَلاَيُمْكِنُ الْفِرَارُ مِنْ حُكُوْمَتِكَ

உனது அதிகாரத்திலிருந்து வெருண்டோட முடியாது.

اَللّٰهُمَّ لاَ اَجِدُ لِذُنُوْبِي غَافِرًا وَلاَ لِقَبَائِحِي سَاتِرًا

அல்லாஹ்வே! உன்னைத் தவிர எனது பாவங்களை மன்னிக்கக் கூடிய வேறெவரையும் நான் காணவில்லை.

وَلاَ لِشَيْئٍ مِنْ عَمَلِي الْقَبِيْحِ بِالْحَسَنِ مُبَدِّلاً غَيْرَكَ لاَاِلٰهَ

اِلاَّ اَنْتَ سُبْحَانَكَ وَبِحَمْدِكَ

எனது அலங்கோலங்களை அழகாக்கக்கூடியவன் உன்னையன்றி வேறுயாருமில்லை. வணக்கத்திற்குரியோன் உன்னையன்றி வேறுயாருமில்லை. உன்னைப் புகழ்ந்து தூய்மைப்படுத்துகிறேன்.

ظَلَمْتُ نَفْسِي وَتَجَرَّأْتُ بِجَهْلِي وَسَكَنْتُ اِلَى قَدِيْمِ ذِكْرِكَ

لِي وَمَنِّكَ عَلَيَّ

எனது மடமை துணிச்சலடைந்து, எனக்கு நானே தீங்கிழைத்துக் கொண்டேன். உன்னை நினைவுகூர்வதன் மூலமாகவும், உனது அருட்கொடைகள் மூலமாகவும் நான் அமைதியடைந்துவிட்டேன்.

اَللّٰهُمَّ مَوْلاَيَ كَمْ مِنْ قَبِيْحٍ سَتَرْتَهُ وَكَمْ مِنْ فَادِحٍ مِنَ

الْبَلاَءِ اَقَلْتَهُ

எனது எஜமானாகிய அல்லாஹ்வே! எனது எத்தனை அலங்கோலங்களை மறைத்துள்ளாய். எனது எத்தனை சோதனைகளின் சுமைகளைக் குறைத்துள்ளாய்.

وَكَمْ مِنْ عِثَارٍ وَقَيْتَهُ وَكَمْ مِنْ مَكْرُوْهٍ دَفَعْتَهُ

எத்தனை கஷ்டங்களிலிருந்து என்னைப் பாதுகாத்துள்ளாய்.
எத்தனை கெடுதிகளைத் தடுத்துள்ளாய்.

وَكَمْ مِنْ ثَنَاءٍ جَمِيْلٍ لَسْتُ اَهْلاً لَهُ نَشَرْتَهُ

நான் தகுதிபெறாத எத்தனை புகழை எனக்கு நீ சூட்டினாய்.

اَللّٰهُمَّ عَظُمَ بَلاَئِى وَاَفْرَطَ بِى سُوْءُ حَالِى

அல்லாஹ்வே! எனது சோதனைகள் மிகைத்து, எனது தீயநிலை
என்னை சிரமத்தில் ஆழ்த்தியுள்ளது.

وَقَصُرَتْ بِى اَعْمَالِى وَقَعَدَتْ بِى اَغْلاَلِى

எனது நற்செயல்கள் சுருங்கிவிட்டன. எனது
விலங்குகள் இறுக்கமடைந்து விட்டன.

وَحَبَسَنِى عَنْ نَفْعِى بُعْدُ آمَالِى وَخَدَعَتْنِى الدُّنْيَا

بِغُرُوْرِهَا وَنَفْسِى بِخِيَانَتِهَا وَمِطَالِى

எனது உயர்ந்த இலட்சியங்கள் எனக்குப் பயனற்றுப்
போய்விட்டன. இந்த உலகம் ஏமாற்றுவித்தையினாலும், எனது
ஆன்மா மோசடியினாலும் எனக்கு துரோகமிழைத்துவிட்டன.

يَاسَيِّدِى فَاَسْئَلُكَ بِعِزَّتِكَ اَنْ لاَيَحْجُبَ عَنْكَ دُعَائِى سُوْءُ

عَمَلِى وَفِعَالِى

எனது எஜமானே! உனது கண்ணியத்தின் மூலமாகக்
கேட்கிறேன். எனது தீய செயலையும், நடவடிக்கையையும் எனது
பிரார்த்தனைகள் உன்னையடைவதற்குத் திரையாக
ஆக்கிவிடாதே.

وَلاَ تَـفْضَحَنِـي بِخَـفِيٍّ مَااطَّلَعْتُ عَلَيْهِ مِنْ سِرِّيْ

நீ தெரிந்து வைத்திருக்கும் எனது இரகசிய வாழ்விலுள்ள அந்தரங்கங்களை அம்பலமாக்கிவிடாதே.

وَلاَتُعَاجِلْنِـي بِالْعُقُوبَةِ عَلَيَّ مَاعَمِلْتُهُ فِى خَلَوَاتِـي مِنْ

سُوْءِ فِعَلِي وَاِسَاءَتِي وَدَوَامِ تَـفْرِيْطِي وَجَهَالَتِـي وَكَثْرَةِ

شَهَوَاتِـي وَغَفْلَـتِـي

நான் தனித்திருக்கும் வேளையில் எனது மடமையினாலும், எனது இச்சை மேலீட்டாலும், மறதியினாலும், தீயசெயல்களினாலும் நான் செய்த தவறுகளுக்கு தண்டனைகளைத் தீவிரப்படுத்திவிடாதே.

وَكُنِ اللّٰهُمَّ بِعِزَّتِكَ لِي فِى الْاَحْوَالِ كُلِّهَا رَؤُوْفًا

وَعَلَيَّ فِى جَمِيْعِ الْاُمُوْرِ عَطُوْفًا

அல்லாஹ்வே! உனது கண்ணியத்தின் மூலமாக எனது எல்லா நிலைகளிலும் என்மீது இரக்கமுடையவனாக நீ இருப்பாயாக. எனது எல்லா கருமங்களிலும் என் மீது கருணையுள்ளவனாகவும் இருப்பாயாக.

اِلٰـهِي وَرَبِّـي مَنْ لِي غَيْرُكَ

اَسْئَلُهُ كَشْفَ ضُرِّيْ وَالنَّظْرَ فِـي اَمْرِي

என் இரட்சகனே! இறைவனே! எனது நெருக்கடிகளைப் போக்குமாறும், எனது விடயத்தில் கரிசனை காட்டுமாறும் உன்னையன்றி வேறு யாரிடம் நான் கேட்க முடியும்.

اِلٰهِى وَمَوْلاَىَ اَجْرَيْتَ عَلَيَّ حُكْمًا اتَّبَعْتُ فِيْهِ هَوَى نَفْسِى وَلَمْ اَحْتَرِسْ فِيْهِ مِنْ تَزْيِيْنِ عَدُوِّى

எனது எஜமானே! இறைவனே! நீ என் மீது அதிகாரத்தை அமுலாக்கினாய். நானோ எனது இச்சைக்குப் பணிந்து எனது எதிரியான ஷைத்தானிலிருந்து பாதுகாப்புப் பெறாது இருந்துவிட்டேன்.

فَغَرَّنِى بِمَا اَهْوَى وَاَسْعَدَهُ عَلَى ذٰلِكَ الْقَضَاءِ

எனது ஆசைகள் என்னை மயக்கிவிட்டன. என்னை அழிவுக்குள்ளாக்கி விட்டன.

فَتُجَاوَزَتْ بِمَا جَرَى عَلَيَّ مِنْ ذٰلِكَ بَعْضَ حُدُوْدِكَ

என் மீது அமுலாகியிருந்த எல்லைகளை நான் மீறிவிட்டேன்.

فَخَالَفْتُ بَعْضَ اَوَامِرِكَ فَلَكَ الْحُجَّةُ عَلَيَّ فِى جَمِيْعِ ذٰلِكَ وَلاَحُجَّةَ لِى فِيْمَا جَرَى عَلَيَّ فِيْهِ قَضَاءُكَ وَاَلْزَمَنِى حُكْمُكَ وَبَلاَؤُكَ

உனது நியதி அமுலாக்கப்படும் போதும், உனது சோதனையும் அதிகாரமும் என்னைக் கட்டுப்படுத்தும் போதும் உனது ஆணைகளுக்கு நான் மாறு செய்துவிட்டேன். இவையனைத்திற்கும் உன்னிடத்திலே ஆதாரம் இருக்கின்றது.

وَقَدْ اَتَيْتُكَ يَااِلٰهِى بَعْدَ تَقْصِيْرِى وَاِسْرَافِى عَلَى نَفْسِى

எனது இறைவனே! எனது அமல்களில் குறைவு செய்தவனாகவும், என் ஆன்மாவின் மீது வரம்பு கடந்தவனாகவும் உன்னிடத்தில் வந்துள்ளேன்.

مُعْتَذِرًا نَادِمًا مُنْكَسِرًا مُسْتَقِيْلاً مُسْتَغْفِرًا مُنِيْبًا مُقِرًّا مُذْعِنًا مُعْتَرِفًا

வருந்தியவனாக, திருந்தியவனாக, பாவமன்னிப்புக் கோரியவனாக எனது குற்றங் குறைகளை ஏற்றுக் கொண்டவனாக உனது சந்நிதியில் நிற்கிறேன்.

لاَ أَجِدُ مَفَرًّ مِمَّا كَانَ مِنِّي

என்னில் நிகழ்ந்துவிட்டதை ஒளிவுமறைவின்றி உன்னிடம் சமர்ப்பித்துவிட்டேன்.

وَلاَ مَفْزَعًا أَتَوَجَّهُ إِلَيْهِ فِي أَمْرِي غَيْرَ قَبُوْلِكَ عُذْرِي وَإِدْخَالِكَ إِيَّايَ فِي سِعَةِ رَحْمَتِكَ

எனது பணிவான இந்த பாவமீட்சியை ஏற்று, உனது பரந்த அருட்கடாட்சத்தில் என்னை ஏற்றுக் கொள்வதைத் தவிர எனக்கு வேறுவழியில்லை நாயனே.

اَللَّهُمَّ فَاقْبَلْ عُذْرِي وَارْحَمْ شِدَّةَ ضُرِّي وَفُكَّنِي مِنْ شَدِّ وَثَاقِي

அல்லாஹ்வே! எனது மன்னிப்பை ஏற்று எனது கஷ்டநஷ்டங்களில் அன்பு காட்டுவாயாக. எனது நெருக்கடிகளைப் போக்கி வைப்பாயாக.

يَارَبِّ ارْحَمْ ضَعْفَ بَدَنِي

இரட்சகனே! எனது உடலின் பலவீனத்தின் மீது அருள்புரிவாயாக

وَرِقَّةَ جِلْدِى وَدِقَّةَ عَظْمِى

எனது தோலின் மென்மையிலும் எலும்பின் நுட்பத்திலும் அருள்புரிவாயாக.

يَامَنْ بَدَاَ خَلْقِى وَذِكْرِى وَتَرْبِيَتِى وَبِرِّى وَتَغْذِيَتِى

என்னைத் தொடக்கத்தில் உருவாக்கி, பராமரித்து, உணவளித்து, சிந்தனாசக்தியைத் தந்து நன்மை பல புரிந்தவன் நீயே.

هَبْنِى لاِبْتِدَاءِ كَرَمِكَ وَسَالِفِ بِرِّكَ بِى

நீ ஆரம்பத்தில் எனக்குப் புரிந்த அன்பையும் அருளையும் மீண்டும் எனக்கு வாரிவழங்குவாயாக.

يَااِلٰهِى وَسَيِّدِى وَرَبِّى اَتُرَاكَ مُعَذِّبِى بِنَارِكَ بَعْدَ

تَوْحِيْدِكَ وَبَعْدَ مَاانْطَوَى عَلَيْهِ قَلْبِى مِنْ مَعْرِفَتِكَ

وَلَهِجَ بِهِ لِسَانِى مِنْ ذِكْرِكَ وَاعْتَقَدَهُ ضَمِيْرِى مِنْ

حُبِّكَ وَبَعْدَ صِدْقِ اعْتِرَافِى وَدُعَائِى خَاضِعًا لِرُبُوْبِيَّتِكَ

என் எஜமானே! இறைவனே! என்னை ஆளும் வல்லோனே! உன்னை மட்டும் நம்பி வழிபட்ட பின் உனது நரகத்தில் போட்டு என்னை நீ வேதனை செய்வாய் என்று நான் நினைக்கவில்லை. அதுவும் உன்னை அறிவதால் என் உள்ளம் நிரம்பி, உனது நினைவினால் எனது நாவு நனைந்து, எனது அகம் உனது நேசத்தால் உருகி, எனது பிரார்த்தனையும் உள்ளுணர்வும் உனது தெய்வீகத் தன்மைக்கு முற்றிலும் அடிபணிந்து விட்டபின்னர், என்னைத் தண்டித்து வேதனை செய்யக் கூடியவனாக உன்னை நான் காணவில்லை.

هَيْهَاتَ اَنْتَ اَكْرَمُ مِنْ اَنْ تُضَيِّعَ مَنْ رَبَّيْتَهُ

நீ மிக சங்கையானவன். நீ உருவாக்கி வளர்த்த ஒருவனை நீயே பழுதாக்குவதா?

أَوْ تُبَعِّدَ مَنْ أَدْنَيْتَهُ أَوْ تُشَرِّدَ مَنْ آوَيْتَهُ

நீ அபயமளித்து அரவணைத்துக் கொண்ட ஒருவனை அழித்து விரட்டுவாயா?

أَوْ تُسَلِّمَ إِلَى الْبَلَاءِ مَنْ كَفَيْتَهُ وَرَحِمْتَهُ

நீ அன்புகாட்டி ஆதரவு கொடுத்த ஒருவனை சோதனைக்குள்ளாக்குவாயா?

وَلَيْتَ شِعْرِي يَاسَيِّدِي وَإِلٰهِي وَمَوْلَايَ أَتُسَلِّطُ النَّارَ

عَلَى وُجُوهٍ خَرَّتْ لِعَظَمَتِكَ سَاجِدَةً

எனது எஜமானே! பாதுகாவலனே! உனது மகத்துவத்திற்காக உன்னைத் தொழுது பணிந்த சிரங்கள் மீது நீ நரக நெருப்பை சாட்டி விடுவாயா?

وَعَلَى أَلْسُنٍ نَطَقَتْ بِتَوْحِيدِكَ صَادِقَةً وَبِشُكْرِكَ مَادِحَةً

இன்னும், உனது ஏகத்துவத்தை உண்மையாகவே மொழிந்து, உன்னைப் புகழ்ந்து நன்றி கூறிய நாவுகளின் மீதும்

وَعَلَى قُلُوبٍ اعْتَرَفَتْ بِإِلٰهِيَّتِكَ مُحَقِّقَةً

உனது தன்னிகரற்ற தெய்வீகத் தன்மையை திடஉறுதியோடு ஏற்றுக் கொண்ட இதயங்கள் மீதும்

وَعَلَى ضَمَائِرَ حَوَتْ مِنَ الْعِلْمِ بِكَ حَتَّى صَارَتْ خَاشِعَةً

உன்னைப் பற்றிய அறிவால் நிரம்பி, உன்னைப் பணிந்த உள்ளுறுப்புகள் மீதும்

وَعَلَى جَوَارِحَ سَعَتْ إِلَى أَوْطَانِ تَعَبُّدِكَ طَائِعَةً

உனக்கு வழிபட்ட நிலையில் உன்னை வணங்கும் தேகங்கள் மீதும்

وَاَشَارَتْ بِاسْتِغْفَارِكَ مُذْعِنَةً مَا هٰكَذَا الظَّنُّ بِكَ

தூய நல்லெண்ணத்தோடு பாவமன்னிப்புக் கோரிய அவயவங்கள் மீதும் நீ நரகத்தை சாட்டிவிடுவாயா? உன்னைப் பற்றி இவ்வாறு எண்ண முடியுமா?

وَلاَ اُخْبِرْنَا بِفَضْلِكَ عَنْكَ يَاكَرِيْمُ

சங்கையாளனே! உனது சிறப்புகள் எமக்கு முழுமையாக அறிவிக்கப்படவில்லை.

يَارَبِّ وَاَنْتَ تَعْلَمُ ضَعْفِى عَنْ قَلِيْلٍ مِنْ بَلاَءِ الدُّنْيَا وَعُقُوْبَاتِهَا

எனது இறைவனே! இவ்வுலகின் சோதனைகளும் வேதனைகளும் இங்கு நிகழும் வெறுப்பான நெருக்கடிகளும் நிச்சயமாக அற்பமானவையே.

وَمَا يَجْرِى فِيْهَا مِنَ الْمَكَارِهِ عَلَى اَهْلِهَا عَلَى اَنَّ ذٰلِكَ بَلاَءٌ وَمَكْرُوْهٌ قَلِيْلٌ مَكْثُهُ يَسِيْرٌ بَقَاءُهُ قَصِيْرٌ مُدَّتُهُ

இவ்வுலகத்தார் மீது நடக்கும் வெறுப்பான விடயங்கள் மிகக் குறுகிய காலத்தில் நீங்கிவிடக் கூடியவையே.
அவ்வாறிருந்தும்கூட இவற்றையே தாங்கிக் கொள்ள சக்தியற்ற நான்,

فَكَيْفَ احْتِمَالِى لِبَلاَءِ الْآخِرَةِ وَجَلِيْلِ وُقُوْعِ الْمَكَارِهِ فِيْهَا

மறுமையின் மிகக் கொடிய வேதனைகளையும் நீண்டகாலத் தண்டனைகளையும் எவ்வாறு தாங்கிக் கொள்ள முடியும்?

وَهُوَ بَلاَءٌ تَطُوْلُ مُدَّتُهُ وَيَدُوْمُ مَقَامُهُ

அது நீண்ட காலமும் நிரந்தரமுமான சோதனையாகும்.

وَلاَ يُخَفَّفُ عَنْ اَهْلِهِ لاَنَّهُ لاَيَكُوْنُ اِلاَّ عَنْ غَضَبِكَ

وَاَنْتِـقَامِكَ وَسَخْطِكَ وَهٰذَا مَالاَتَـقُوْمُ لَهُ السَّمٰوَاتُ

وَالْاَرْضُ

அது, வேதனையுடையோருக்கு இலகுவாக இருக்கமாட்டாது. ஏனெனில், அது உனது கோபத்தினாலும், தண்டனையினாலும், சீற்றத்தினாலுமேயன்றி நிகழமாட்டாது. வானங்களும் பூமியும் கூட அதற்கு ஈடுகொடுக்க முடியாது.

يَا سَيِّدِى فَكَيْفَ بِى وَاَنَا عَبْدُكَ الضَّعِيْفُ الذَّلِيْلُ الْحَقِيْرُ

الْمِسْكِيْنُ الْمُسْتَكِيْنُ

எனது எஜமானே! அப்படியான தண்டனையை நான் எவ்வாறு தாங்கிக் கொள்வேன். நான் எளிய, அற்பமான பரமஏழையாகிய, பலவீனமான உனது அடிமை.

يَااِلـٰهِى وَرَبِّـى وَسَيِّدِى وَمَوْلاَىَ

என் இறைவனே! என்னைப் படைத்துப் பரிபாலிப்பவனே! என் தலைவனே! எஜமானே!

لِاَىِّ الْاُمُوْرِ اِلَيْكَ اَشْكُو وَلِمَامِنْهَا اَضِجُّ وَاَبْكِى لِاَلِيْمِ

الْعَذَابِ وَشِدَّتِهِ اَمْ لِطُوْلِ الْبَلاَءِ وَمُدَّتِهِ

நான் எந்த விடயத்திற்காக உன்னிடம் முறையீடு செய்கின்றேன். எதற்காக உன்னிடம் அழுதுபிரலாபிக்கின்றேன். கொடிய கடின வேதனைக்காகவா? அல்லது நீண்ட நெடிய சோதனைக்காகவா?

فَلَئِنْ صَيَّرْتَنِـــى فِى الْعُقُوبَاتِ مَعَ اَعْدَائِكَ وَجَمَعْتَ

بَيْنِــى وَبَيْنَ اَهْلِ بَلاَئِكَ وَفَرَّقْتَ بَيْنِــى وَبَيْنَ اَحِبَّائِكَ

وَاَوْلِيَائِكَ فَهَبْنِــى يَاالِـهِى وَسَيِّدِى وَمَوْلاَىَ وَرَبِّــى

நீ என்னை எதிரிகளுடன் சேர்த்து தண்டிப்பாயேயானால், உனது வேதனைக்கு உள்ளானவர்களுடன் என்னையும் சேர்த்துக் கொள்வாயேயானால், உனது நேசர்களை விட்டும் என்னைப் பிரித்து விடுவாயேயானால் என்பதற்காகவே நான் உனது அருளை வேண்டி நிற்கின்றேன். எனது இறைவனே! எஜமானே! தலைவனே! இரட்சகனே!

صَبَرْتُ عَلَى عَذَابِكَ فَكَيْفَ اَصْبِرُ عَلَى فِرَاقِكَ

நீ என்னை வேதனைக்குள்ளாக்கிய போது நான் பொறுத்துக் கொண்டேன். நீ என்னை விட்டுப் பிரிந்திருப்பதை என்னால் எவ்வாறு பொறுத்துக் கொள்ள முடியும்?

وَهَبْنِــى صَبَرْتُ عَلَى حَرِّ نَارِكَ فَكَيْفَ اَصْبِرُ عَنِ النَّظَرِ

اِلَى كَرَامَتِكَ

உனது நரகநெருப்பின் உஷ்ணத்தைப் பொறுத்துக் கொண்டேன். உனது கொடையைக் காணாதிருப்பதை எவ்வாறு பொறுத்துக் கொள்வேன்.

اَمْ كَيْفَ اَسْكُنُ فِى النَّارِ وَرَجَائِى عَفْوُكَ

அல்லது உனது பரந்த மன்னிப்பை இரந்து கேட்கும் நான் நரக நெருப்பில் எவ்வாறு அமைதியடைவேன்?

فَبِعِزَّتِكَ يَاسَيِّدِى وَمَوْلاَىَ اُقْسِمُ صَادِقًا لَئِنْ تَرَكْتَنِى

نَاطِقًا

எனது எஜமானே! தலைவனே! உண்மையாகவே உனது கண்ணியத்தின் மீது சத்தியமிட்டுச் சொல்கிறேன். என்னை நீ பேசக்கூடியவனாக ஆக்கியுள்ளமையால்,

لَاَضِجَّنَّ اِلَيْكَ بَيْنَ اَهْلِهَا ضَجِيْجَ الْاٰمِلِيْنَ

நம்பிக்கையுள்ளோரின் கூச்சலாக நான் உன்னிடம் கூச்சலிட்டுப் பிரார்த்திக்கிறேன்.

وَلَاَصْرَخَنَّ اِلَيْكَ صُرَاخَ الْمُسْتَصْرِخِيْنَ

அவலக்குரல் எழுப்புபவர்களின் அபயக்குரலாக நான் உன்னை அழைக்கிறேன்.

وَلَاَبْكِيَنَّ عَلَيْكَ بُكَاءَ الْفَاقِدِيْنَ

சகலதையும் இழந்துவிட்டவர்களின் அழுகையாக உன்னிடம் அழுது மன்றாடுகின்றேன்.

وَلَاُنَادِيَنَّكَ اَيْنَ كُنْتَ يَاوَلِيَّ الْمُؤْمِنِيْنَ يَاغَايَةَ آمَالِ

الْعَارِفِيْنَ

விசுவாசிகளின் காவலனே! மெய்ஞ்ஞானிகளின் இலக்கானவனே! நீ எங்கிருந்த போதிலும் உன்னை நான் அழைக்கின்றேன்.

يَاغِيَاثَ الْمُسْتَغِيْثِيْنَ يَاحَبِيْبَ قُلُوْبِ الصَّادِقِيْنَ

உதவிகோருவோருக்கு உதவுபவனே! உண்மையாளர்களின் உளப்பூர்வ நண்பனே!

وَيَااِلٰهَ الْعَالَمِيْنَ اَفَتُرَاكَ سُبْحَانَكَ يَااِلٰهِي وَبِحَمْدِكَ تَسْمَعُ

فِيْهَا صَوْتَ عَبْدٍ مُسْلِمٍ سُجِنَ فِيْهَا بِمُخَالَفَتِهِ

உலகத்தாரின் இறைவனே! உன்னைப் புகழ்ந்து துதிக்கிறேன். தனது முரண்பட்ட செயலுக்காக சிறையிடப்பட்டுள்ள ஒரு முஸ்லிமின் அவலக்குரலை நீ கேட்கிறாய்.

وَذَاقَ طَعْمَ عَذَابِهَا بِمَعْصِيَتِهِ وَحُبِسَ بَيْنَ اَطْبَاقِهَا بِجُرْمِهِ وَجَرِيْرَتِهِ

அந்த மனிதன், தனது குற்றச் செயல்களுக்காக வேதனையைச் சுவைத்துக் கொண்டிருக்கிறான். அவன் உன்னிடம் அபயம் தேடியவனாக அவலக்குரல் எழுப்புகிறான்.

وَهُوَ يَضِجُّ اِلَيْكَ ضَجِيْجَ مُؤَمِّلٍ لِرَحْمَتِكَ وَيُنَادِيْكَ بِلِسَانِ اَهْلِ تَوْحِيْدِكَ وَيَتَوَسَّلُ اِلَيْكَ بِرُبُوْبِيَّتِكَ

உன்னை ஒருமைப்படுத்தியவர்களின் நாவினால் உன்னை அழைக்கின்றான். உனது பராமரித்தல், பாதுகாக்கும் உயர்ந்த தன்மையின் மீது நம்பிக்கை வைத்து உன்னிடம் உதவி தேடுகின்றான்.

يَامَوْلاَىَ فَكَيْفَ يَبْقَى فِى الْعَذَابِ وَهُوَ يَرْجُو مَاسَلَفَ مِنْ حِلْمِكَ اَمْ كَيْفَ تُؤْلِمُهُ النَّارُ وَهُوَ يَأْمُلُ فَضْلَكَ وَرَحْمَتَكَ

எனது எஜமானே! உனது கடந்த கால அரவணைப்பை வேண்டி நிற்கும் அவன் எப்படி வேதனையில் நிலைத்திருக்க முடியும். உனது அருளையும் கொடையையும் கேட்டுத் துடிக்கும் அவனை நரகநெருப்பு எவ்வாறு நோவிக்க முடியும்?

اَمْ كَيْفَ يُحْرِقُهُ لَهِيْبُهَا وَاَنْتَ تَسْمَعُ صَوْتَهُ وَتَرَى مَكَانَهُ

அவன் இருக்கும் இடத்தை நீ பார்த்துக் கொண்டிருக்கிறாய். அவனது ஈனக்குரலை நீ கேட்டுக் கொண்டிருக்கிறாய். நரக நெருப்பின் கொழுந்துகள் அவனை எவ்வாறு எரிக்க முடியும்?

اَمْ كَيْفَ يَشْتَمِلُ عَلَيْهِ زَفِيْرُهَا وَاَنْتَ تَعْلَمُ ضَعْفَهُ

நரகின் கொடிய சத்தத்தை அவன் எப்படி சகிப்பான்? அவனது பலவீனத்தை நீ நன்கறிந்திருக்கின்றாய்.

اَمْ كَيْفَ يَتَقَلْقَلُ بَيْنَ اَطْبَاقِهَا وَاَنْتَ تَعْلَمُ صِدْقَهُ

அவனது உள்ளத்தை நீ அறிந்திருக்க. நரகின் படிகளில் அவன் எவ்வாறு புரள முடியும்?

اَمْ كَيْفَ تَـزْجُرُهُ زَبَانِيَّتُهَا وَهُوَ يُنَادِيْكَ يَارَبَّهُ اَمْ كَيْفَ

يَرْجُوْ فَضْلَكَ فِى عِتْقِهِ مِنْهَا فَـتَـتْرُكُهُ فِيْهَا هَيْهَاتَ مَاذٰلِكَ

الظَّنُّ بِكَ وَلاَ الْمَعْرُوْفُ مِنْ فَضْلِكَ

அவன், என் எஜமானனே என்று உன்னைக் கூவியழைத்துக் கொண்டிருக்கும் போது, நரகின் பாதுகாவலர்களான ஸபானியாக்கள் அவனை எப்படி அடித்து விரட்ட முடியும்? தன்விடுதலைக்காக உன் கருணையை வேண்டிநிற்கும் ஒருவனை சிறைக்கைதியாக நீ எப்படி விட்டுவைப்பாய்? இது ஒருபோதும் நடவாது.

وَلاَ مُشْبِهٌ لِمَا عَامَلْتَ بِهِ الْمُوَحِّدِيْنَ مِنْ بِرِّكَ وَاِحْسَانِكَ

உன் கொடையை மிஞ்சிய கொடையில்லை. உன்னை ஏகத்துவப்படுத்தியோருக்கு ஒப்பில்லை.

فَبِالْيَقِيْنِ اَقْطَعُ لَوْلاَ مَاحَكَمْتَ بِهِ مِنْ تَعْذِيْبِ جَاحِدِيْكَ

وَقَضَيْتَ بِهِ مِنْ اَخْلاَدِ مُعَانِدِيْكَ لَجَعَلْتَ النَّارَ كُلَّهَا بَرْدًا

وَسَلاَمًا

திட்டவட்டமாக உன்னை நிராகரிப்பவனைத் தண்டித்து, உன்னோடு பிணங்கி நிற்பவனை வேதனையில் நிலைப்படுத்துவது என்று நீ சட்டமியற்றி தீர்ப்புச் செய்யாமல் இருந்திருந்தால் முழுநரகையும் குளுமையாகவும் செழுமையாகவும் ஆக்கியிருப்பாய்.

وَمَاكَانَ لاَحَدٍ فِيْهَا مَقَرًّا وَلاَ مَقَامًا لكِنَّكَ تَقَدَّسَتْ

اَسْمَائُكَ اَقْسَمْتَ اَنْ تَمْلاَهَا مِنَ الْكَافِرِيْنَ مِنَ الْجِنَّةِ

وَالنَّاسِ اَجْمَعِيْنَ وَاَنْ تُخَلِّدَ فِيْهَا الْمُعَانِدِيْنَ

அங்கு தற்காலிகமாகவோ நிரந்தரமாகவோ எவரும் தங்கியிருக்க மாட்டார்கள். நிச்சயமாக உனது பெயர்கள் பரிசுத்தம் வாய்ந்தவை. மனிதர்களிலும் ஜின்களிலுமுள்ள நிராகரிப்பாளர்களைக் கொண்டு நரகத்தை நிரப்பி, அடங்காப் பிடாரிகளை அதில் நிலைப்படுத்துவேன் என முன்னரே நீ சத்தியம் செய்து விட்டாய்.

وَاَنْتَ جَلَّ ثَنَاؤُكَ قُلْتَ مُبْتَدِئًا وَتَطَوَّلْتَ بِالْاِنْعَامِ مُتَكَرِّمًا

சங்கைமிக்க உனது அருள் ஓங்கி, உனது புகழ் மகத்துவம் அடைந்துவிட்டது.

اَفَمَنْ كَانَ مُؤْمِنًا كَمَنْ كَانَ فَاسِقًا لاَيَسْتَوُوْنَ

கெட்டவர்கள் விசுவாசிகளைப் போலிருப்பார்களா? அவர்கள் ஒருபோதும் சமமாகமாட்டார்கள்.

اِلـهِى وَسَيِّدِى فَاَسْئَلُكَ بِالْقُدْرَةِ الَّتِـى قَدَّرْتَهَا وَبِالْقَضِيَّةِ

الَّتِـى حَتَمْتَهَا وَحَكَمْتَهَا وَغَلَبْتَ مَنْ عَلَيْهِ اَجْرَيْتَهَا

எனது எஜமானே! நாயனே! வியாபித்த உனது வல்லமையைக் கொண்டும், நீ முடிவு செய்து விட்ட உனது தீர்ப்பைக் கொண்டும் உன்னிடம் இரந்து கேட்கிறேன்.

اَنْ تَهَبَ لِى فِى هذِهِ اللَّيْلَةِ وَفِى هذِهِ السَّاعَةِ كُلَّ جُرْمٍ

اَجْرَمْتُهُ وَكُلَّ ذَنْبٍ اَذْنَبْتُهُ وَكُلَّ قَبِيْحٍ اَسْرَرْتُهُ

இந்த இரவிலே இந்த வேளையிலே நான் செய்த குற்றங்களுக்காக உன் அருள்வேண்டி நிற்கிறேன். நான் புரிந்த ஒவ்வொரு குற்றங்களையும், நான் மறைத்துள்ள ஒவ்வொரு இழிவுகளையும்

وَكُلَّ جَهْلٍ عَمِلْتُهُ كَتَمْتُهُ اَوْ اَعْلَنْتُهُ اَخْفَيْتُهُ اَوْ اَظْهَرْتُهُ

நான் இரகசியமாகவோ வெளிப்படையாகவோ செய்த எல்லா மடமைச் செயல்களையும்

وَكُلَّ سَيِّئَةٍ اَمَرْتَ بِاِثْبَاتِهَا الْكِرَامَ الْكَاتِبِيْنَ الَّذِيْنَ وَكَّلْتَهُمْ

بِحِفْظِ مَا يَكُوْنُ مِنِّـى وَجَعَلْتَهُمْ شُهُوْدًا عَلَيَّ مَعَ جَوَارِحِي

எனது உடல் உறுப்புகளுடன் சேர்ந்த எனது குற்றச் செயல்களை பதிவு செய்யுமாறு நீ பணித்துள்ள சங்கைக்குரிய பதிவாளர்கள் சாட்சியாக,

وَكُنْتَ اَنْتَ الرَّقِيْبَ عَلَيَّ مِنْ وَرَائِهِمْ وَالشَّاهِدَ لِمَا خَفِيَ

عَنْهُمْ

அனைத்திற்கும் மேலாக நீ என் இயக்கங்களின் மீது மிக உன்னிப்பாக அவதானித்துக் கொண்டிருக்கின்றாய்.

وَبِرَحْمَتِكَ اَخْفَيْتَهُ وَبِفَضْلِكَ سَتَرْتَهُ

என் குற்றங்களை உன் அருளினால் மறைத்து, உன் கொடையினால் ஒழித்துவிட்டாய்.

وَاَنْ تُوَفِّرَ حَظِّى مِنْ كُلِّ خَيْرٍ تُنْزِلُهُ اَوْ اِحْسَانٍ تُفْضِلُهُ

நீ இறக்கிவைத்துள்ள எல்லா நலவுகளிலிருந்தும் என் சௌபாக்கியங்களை அதிகப்படுத்துவாயாக. நீ வழங்கியுள்ள பேருபகாரங்களிலும்

اَوْ بِرٍّ تَنْشُرُهُ اَوْ رِزْقٍ تَبْسُطُهُ اَوْ ذَنْبٍ تَغْفِرُهُ اَوْ خَطَاءٍ تَسْتُرُهُ

நீ பரப்பியுள்ள நன்மைகளிலும் நீ விசாலப்படுத்தியுள்ள கொடைகளிலும் நீ மன்னிக்கக்கூடிய பாவங்களிலும், நீ மறைத்துள்ள தவறுகளிலும் என் சௌபாக்கியத்தை மிகைப்படுத்துவாயாக.

يَارَبِّ يَارَبِّ يَاالٰـهِى وَسَيِّدِى وَمَوْلاَىَ وَمَالِكَ

رِقِّى يَامَنْ بِيَدِهٖ نَاصِيَتِــى يَاعَلِيْمًا بِضُرِّى وَمَسْكَنَتِــى

என் இரட்சகனே! இறைவனே! எஜமானே! இந்த அடிமையின் சொந்தக்காரனே! என்னை நினைத்தவாறெல்லாம் ஆட்டிப்படைப்போனே! எனது கஷ்டநஷ்டங்களை அறிந்தோனே!

يَاخَبِيْرًا بِفَقْرِى وَفَاقَتِــى يَارَبِّ يَارَبِّ يَارَبِّ

எனது வறுமையையும் ஏழ்மையையும் நன்கறிந்தோனே!

اَسْئَلُكَ بِحَقِّكَ وَقُدْسِكَ وَاَعْظَمِ صِفَاتِكَ وَاَسْمَائِكَ

உனது உள்ளமை, புனிதத்துவம், உனது திருநாமங்களின் மகத்துவத்தினால் உன்னிடத்தில் கேட்கின்றேன்.

اَنْ تَجْعَلَ اَوْقَاتِــى فِى اللَّيْلِ وَالنَّهَارِ بِذِكْرِكَ مَعْمُوْرَةً

இரவிலும் பகலிலுமான எனது நேரங்களை உனது தியானத்தால் நிரப்பிவைக்குமாறும்

وَبِخِدْمَتِكَ مَوْصُوْلَةً وَاَعْمَالِى عِنْدَكَ مَقْبُوْلَةً حَتّٰــى تَكُوْنَ

اَعْمَالِى وَاَوْرَادِى كُلُّهَا وِرْدًا وَاحِدًا

உனக்குப் பணிவிடை செய்வதில் சேர்த்து வைக்குமாறும், எனது செயல்களும் நடவடிக்கைகளும் ஒன்றாக இருக்குமாறு அவற்றை ஏற்றுக் கொள்ளப்பட்டதாக ஆக்கிவைக்குமாறும் கேட்கிறேன்.

وَحَالِى فِى خِدْمَتِكَ سَرْمَدًا

என் எல்லா நிலைகளிலும் உனக்கு நிரந்தரமாக ஊழியம் செய்யக்கூடியவனாகவும் என்னை ஆக்கியருள்வாயாக.

يَاسَيِّدِى يَامَنْ عَلَيْهِ مُعَوَّلِى يَامَنْ اِلَيْهِ شَكَوْتُ اَحْوَالِى

என் எஜமானே! என்னைக் கட்டுப்படுத்துபவனே! எனது நிலைமைகளை முறையிடுவதற்குத் தகுதியானவனே!

يَارَبِّ يَارَبِّ يَارَبِّ قَوِّ عَلَى خِدْمَتِكَ جَوَارِحِى

என் இறைவனே! உனக்குப் பணிவிடை செய்வதன் மீது எனது உறுப்புகளை பலப்படுத்துவாயாக.

وَاشْدُدْ عَلَى الْعَزِيْمَةِ جَوَانِحِى وَهَبْ لِى الْجِدَّ فِى

خَشْيَتِكَ وَالدَّوَامَ فِى الْاِتِّصَالِ بِخِدْمَتِكَ

திடமாக உன் பக்கம் என்னை நிலைத்திருக்கச் செய்வாயாக. உன்னை அஞ்சி வழிபடுவதில் உறுதியைத் தந்தருள்வாயாக. உனக்கு நிரந்தரமாக பணிசெய்வதற்கு அருள்புரிவாயாக.

حَتّـى اَسْرَحَ اِلَيْكَ فِى مَيَادِيْنِ السَّابِقِيْنَ

முன்னைய நல்லடியார்களின் வட்டத்தில் நான் சேர்ந்து கொள்ளும் பொருட்டு

وَاُسْرِعَ اِلَيْكَ فِى الْمُبَادِرِيْنَ وَاشْتَاقَ اِلَى قُرْبِكَ فِى

الْمُشْتَاقِيْنَ

முந்திக் கொண்டவர்களில் நான் உன் பக்கம் முந்திக் கொள்வதற்கும், அவா வைத்தவர்களில் உனது நெருக்கத்தை நான் ஆசைகொள்வதற்கும்

وَادْنُو مِنْكَ دُنُوَّ الْمُخْلِصِيْنَ وَاَخَافُكَ مَخَافَةَ الْمُوْقِنِيْنَ

وَاَجْتَمِعَ فِى جِوَارِكَ مَعَ الْمُؤْمِنِيْنَ

பரிசுத்தவான்களின் நெருக்கத்தை மிஞ்சிய உனது நெருக்கத்தை நான் பெறுவதற்கும் திடமான நம்பிக்கையாளர்களின் பயபக்தியாக உன்னை நான் பயப்படுவதற்கும், விசுவாசிகளுடன் சேர்ந்து உனது பக்கத்தில் நான் கூடியிருப்பதற்கும் எனக்கு நீ அருள்புரிவாயாக

اَللّٰهُمَّ وَمَنْ اَرَادَنِـى بِسُوْءٍ فَاَرِدْهُ

அல்லாஹுவே! எவனாவது எனக்கு தீமைசெய்ய நாடினால், அதை அவனுக்கே காட்டிவிடு.

وَمَنْ كَادَنِـى فَكِدْهُ وَاجْعَلْنِــى مِنْ اَحْسَنِ عَبِيْدِكَ نَصِيْبًا

عِنْدَكَ وَاَقْرَبِهِمْ مَنْزِلَةً مِنْكَ وَاَخَصِّهِمْ زُلْفَةً لَدَيْكَ

உனது பாக்கியங்களைப் பெற்ற அடியார்களில் சிறந்தவனாக என்னை நீ ஆக்கி, எவனாவது எனக்கு சதிசெய்ய முனைந்தால் அவனையே அச்சதிக்கு ஆளாக்கிவிடுவாயாக. மிகச் சிறந்த பேறுபெற்ற அடியானாகவும், உன்னிடத்தில் மிக நெருக்கமானவனாகவும், உன்னிடத்தில் அந்தஸ்து குறிப்பாக்கப்பட்டவனாகவும் என்னை ஆக்கியருள்வாயாக.

فَاِنَّهُ لاَيَنَالُ ذٰلِكَ اِلاَّ بِفَضْلِكَ وَجُدْلِى بِجُوْدِكَ وَاعْطِفْ

عَلَيَّ بِمَجْدِكَ وَاحْفَظْنِــى بِرَحْمَتِكَ

நிச்சயமாக இந்தப் பெறுபேறுகளை உனது சிறப்பினாலன்றி பெற்றுக் கொள்ள முடியாது. மேலும், உனது கொடையை எனக்கு வழங்குவாயாக. என் மீது இரக்கம் காட்டுவாயாக. உனது அருளினால் என்னைப் பாதுகாப்பாயாக.

وَاجْعَلْ لِسَانِـى بِذِكْرِكَ لَهِجًا وَقَلْبِـى بِحُبِّكَ مُتَيَّمًا

எனது நாவை உன்னைத் தியானிப்பதிலேயே திளைத்திருக்கச் செய்வாயாக. எனது உள்ளத்தை உன் மீதான நேசத்தால் நிரப்பிவிடுவாயாக.

وَمُنَّ عَلَيَّ بِحُسْنِ اِجَابَتِكَ وَاَقِلْنِـى عَثْرَتِى وَاغْفِرْلِى زَلَّتِى

எனது முறையீட்டுக்கு உனது அழகிய பதிலளிப்பைத் தருவாயாக. என் சுமைகளை இறக்கி என் தவறுகளை மன்னிப்பாயாக.

فَاِنَّكَ قَضَيْتَ عَلَى عِبَادِكَ بِعِبَادَتِكَ وَاَمَرْتَهُمْ بِدُعَائِكَ

وَضَمِنْتَ لَهُمُ الْاِجَابَةَ

நிச்சயமாக நீ உனக்குப் பணிபுரியும் அடியார்கள் மீது தீர்ப்புச் செய்துள்ளாய். அவர்களுக்கு உன்னை இரைஞ்சுமாறு கட்டளையிட்டுள்ளாய். அவர்களுக்குப் பதில் சொல்வதற்கு நீ பொறுப்பேற்றுள்ளாய்.

فَاِلَيْكَ يَارَبِّ نَصَبْتُ وَجْهِـى

என் இரட்சகனே! உன் பக்கமே என் முகத்தைத் திருப்பிவிட்டேன்.

وَاِلَيْكَ يَارَبِّ مَدَدْتُ يَدِى فَبِعِزَّتِكَ اسْتَجِبْ لِى دُعَائِى

உன்னிடமே கையேந்தி இரந்து நிற்கின்றேன். உனது கண்ணியத்தின் பொருட்டினால் எனது பிரார்த்தனையை ஏற்பாயாக.

وَبَلِّغْنِـى مُنَاىَ وَلَاتَـقْطَعْ مِنْ فَضْلِكَ رَجَائِى

என் நாட்டங்களை நிறைவேற்றித் தந்தருள்வாயாக. எனது தயவான வேண்டுதல்களை உன் அருளிலிருந்து தவிர்த்து விடாதே!

وَاكْـفِـنِـى شَرَّ الْجِنِّ وَالْاِنْسِ مِنْ اَعْدَائِى

மனிதர்களிலும் ஜின்களிலும் உள்ள எனது எதிரிகளிடமிருந்து என்னைப் பாதுகாப்பாயாக.

يَا سَرِيْعَ الرِّضَا اغْفِرْ لِمَنْ لاَيَمْلِكُ اِلاَّ الدُّعَاءَ فَاِنَّكَ فَعَّالٌ لِمَا تَشَاءُ

பொருந்திக் கொள்வதில் விரைவானவனே! பிரார்த்தனையைத் தவிர வேறெதுவுமற்ற இந்த அடியானை மன்னித்தருள்வாயாக. நிச்சயமாக நீ நாடுபவற்றை செய்யக்கூடியவன்

يَامَنِ اسْمُهُ دَوَاءٌ وَذِكْرُهُ شِفَاءٌ وَطَاعَتُهُ غِنًى اِرْحَمْ مَنْ رَأْسُ مَالِهِ الرَّجَاءُ وَسِلاَحُهُ الْبُكَاءُ

தனது பெயரை நோய்நிவாரணியாகவும், தனது திக்ரை சுகமாகவும், தனக்கு வழிப்படுதலை செல்வமாகவும் கொண்டவனே! தயவான வேண்டுதலை தன் மூலதனமாகவும், அழுகையை தன் ஆயுதமாகவும் கொண்ட இந்த அடியான் மீது அருள்புரிவாயாக.

يَاسَابِغَ النِّعَمِ يَادَافِعَ النِّقَمِ يَانُوْرَ الْمُسْتَوْحِشِيْنَ فِى الظُّلَمِ عَالِمًا لاَيُعَلَّمُ

அருட்கொடைகளை சொரிபவனே! சோதனைகளைப் போக்குபவனே! இருளில் தத்தளிப்பவர்களுக்கு ஒளியானவனே! யார் துணையுமின்றி சகலமும் அறிந்தவனே!

صَلِّ عَلَى مُحَمَّدٍ وَآلِ مُحَمَّدٍ

முஹம்மத் நபி (ஸல்) அவர்கள் மீதும், அவர்களது குடும்பத்தினர் மீதும் கருணையையும் அன்பையும் சொரிவாயாக.

وَافْعَلْ بِى مَا اَنْتَ اَهْلُهُ

உன் தகுதிக்கு ஏற்றவாறு என்னை நடாத்துவாயாக.

وَصَلَّى اللّٰهُ عَلَى رَسُوْلِهِ وَالْاَئِمَّةِ الْمَيَامِيْنَ مِنْ آلِهِ وَسَلَّمَ تَسْلِيْمًا كَثِيْرًا

அல்லாஹ் தன் தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் மீதும், அவர்களது குடும்பத்தைச் சேர்ந்த பரிசுத்தமான இமாம்கள் மீதும் ஸலவாத்தும் ஸலாமும் அதிகமாக சொல்லியருள்வானாக.

# دعاء الامام المهدي (ع)

بسم الله الرحمن الرحيم

اَللّٰهُمَّ ارْزُقْنَا تَوْفِيْقَ الطَّاعَةِ

யாஅல்லாஹ்! உனக்கு வழிப்பட்டு நடக்கும் பாக்கியத்தையும்

وَبُعْدَ الْمَعْصِيَةِ

பாவங்களை விட்டும் தூரமாயிருப்பதையும்

وَصِدْقَ النِّيَّةِ

எண்ணத்தில் தூய்மையையும்

وَعِرْفَانَ الْحُرْمَةِ

தடைசெய்யப்பட்டவைகளின் அறிவையும் எமக்குத் தருவாயாக!

وَاَكْرِمْنَا بِالْهُدٰى وَالْاِسْتِقَامَةِ

நேர்வழியைக் கொண்டும், நிலையான இருப்பைக் கொண்டும் எம்மை சங்கைப்படுத்துவாயாக!

وَسَدِّدْ اَلْسِنَتَنَا بِالصَّوَابِ وَالْحِكْمَةِ

உண்மையின் மூலமும் ஞானத்தின் மூலமும் எமது நாவுகளை பலப்படுத்துவாயாக!

وَامْلَأْ قُلُوْبَنَا بِالْعِلْمِ وَالْمَعْرِفَةِ

அறிவினாலும் ஞானத்தினாலும் எமது உள்ளங்களை நிரப்புவாயாக!

وَطَهِّرْ بُطُوْنَنَا مِنَ الْحَرَامِ وَالشُّبْهَةِ

விலக்கப்பட்டவைகளிலிருந்தும் சந்தேகத்திற்குரியவைகளிலிருந்தும் எமது வயிறுகளை சுத்தப்படுத்துவாயாக!

وَاكْفُفْ اَيْدِيَنَا عَنِ الظُّلْمِ وَالسَّرِقَةِ

களவு அநீதிகளை விட்டும் எமது கைகளைத் தடுத்து விடுவாயாக!

وَاغْضُضْ اَبْصَارَنَا عَنِ الْفُجُوْرِ وَالْخِيَانَةِ

மோசடிகள் தீங்குகளிலிருந்து எமது பார்வையை தாழ்த்திவிடுவாயாக!

وَاسْدُدْ اَسْمَاعَنَا عَنِ اللَّغْوِ وَالْغِيْبَةِ

புறம்பேசுதல் வீண்விடயங்கள் போன்றவற்றிலிருந்து எமது செவிகளை சீர்படுத்துவாயாக!

وَتَفَضَّلْ عَلَى عُلَمَائِنَا بِالزُّهْدِ وَالنَّصِيْحَةِ

எமது அறிஞர்களுக்கு உலகப்பற்றற்ற தன்மையையும் உபதேசத்தையும் வழங்குவாயாக!

وَعَلَى الْمُتَعَلِّمِيْنَ بِالْجُهْدِ وَالرَّغْبَةِ

மாணவர்களுக்கு முயற்சியையும் ஆர்வத்தையும் கொடுப்பாயாக!

وَعَلَى الْمُسْتَمِعِيْنَ بِالْاِتِّبَاعِ وَالْمَوْعِظَةِ

செவிமடுப்போர்களுக்கு - வழிப்படும் தன்மையையும் உபதேசம் பெறும் நிலையையும் வழங்குவாயாக!

وَعَلَى مَرْضَى الْمُسْلِمِيْنَ بِالشِّفَاءِ وَالرَّاحَةِ

முஸ்லிம் நோயாளிகளுக்கு ஓய்வையும் உடல்நலத்தையும் வழங்குவாயாக!

وَعَلَى مَوْتَاهُمْ بِالرَّأْفَةِ وَالرَّحْمَةِ

மரணித்த முஸ்லிம்கள் மீது இரக்கமும் அன்பும் நல்குவாயாக!

وَعَلَى مَشَائِخِنَا بِالْوَقَارِ وَالسَّكِيْنَةِ

எமது வயோதிபர்களுக்கு கௌரவத்தையும் அமைதியையும் வழங்குவாயாக!

وَعَلَى الشَّبَابِ بِالْانَابَةِ وَالتَّوْبَةِ

இளைஞர்களுக்கு பாவமன்னிப்பையும் உன்னளவில் மீளும் நிலையையும் ஏற்படுத்துவாயாக!

وَعَلَى النِّسَاءِ بِالْحَيَاءِ وَالْعِفَّةِ

பெண்களுக்கு நாணத்தையும் கற்பையும் கொடுப்பாயாக!

وَعَلَى الْاَغْنِيَاءِ بِالتَّوَاضُعِ وَالسَّعَةِ

செல்வந்தர்களுக்கு பணிவுத்தன்மையையும் விசாலத்தையும் ஏற்படுத்துவாயாக!

وَعَلَى الْفُقَرَاءِ بِالصَّبْرِ وَالْقَنَاعَةِ

ஏழைகளுக்கு பொறுமையையும் போதுமென்ற மனப்பாங்கையும் கொடுப்பாயாக!

وَعَلَى الْغُزَاةِ بِالنَّصْرِ وَالْغَلَبَةِ

எமது போராளிகளுக்கு உதவியையும் வீரத்தையும் கொடுப்பாயாக!

وَعَلَى الْاُسَرَاءِ بِالْخَلَاصِ وَالرَّاحَةِ

போர்க் கைதிகளுக்கு விடுதலையையும் மகிழ்வையும் கொடுப்பாயாக!

وَعَلَى الْاُمَرَاءِ بِالْعَدْلِ وَالشَّفَقَةِ

தலைவர்களுக்கு நீதத்தையும் இரக்கத்தையும் ஏற்படுத்துவாயாக!

وَعَلَى الرَّعِيَّةِ بِالْاِنْصَافِ وَحُسْنِ السِّيْرَةِ

பொறுப்பாளர்கள் நீதியாகவும் நன்னடத்தையோடும் நடந்து கொள்ளும் நிலையை ஏற்படுத்துவாயாக!

وَبَارِكْ لِلْحُجَّاجِ وَالزُّوَّارِ فِى الزَّادِ وَالنَّفَقَةِ

ஹாஜிகளுக்கும் சியாரத் செய்வோருக்கும் அவர்களது செலவு சாதனங்களில் அபிவிருத்தியை ஏற்படுத்துவாயாக!

وَاقْضِ مَا اَوْجَبْتَ عَلَيْهِمْ مِنَ الْحَجِّ وَالْعُمْرَةِ بِفَضْلِكَ

وَرَحْمَتِكَ يَا اَرْحَمَ الرَّاحِمِيْنَ .

அருளாளர்களிலெல்லாம் மிகச் சிறந்த அருளாளனே! நீ மனிதர்களுக்கு விதியாக்கிய ஹஜ் உம்ரா கடமைகளை உனது அருளினாலும் சிறப்பினாலும் அவர்களிலிருந்து ஏற்றுக் கொள்வாயாக!

# تعقيبات بعد الفرائض

## பர்ழு தொழுகைகளுக்குப் பின்னாலான துஆக்கள்

# تعقيب صلاة الصبح

اَصْبَحْنَا وَاَصْبَحَ الْمُلْكَ لِلّٰهِ اَللّٰهُمَّ اِنَّا عَبِيْدُكَ وَاَبْنَاءُ عَبِيْدِكَ
اَللّٰهُمَّ احْفَظْنَا مِنْ حَيْثُ نَحْتَفِظُ وَمِنْ حَيْثُ لاَنَحْتَفِظُ
اَللّٰهُمَّ احْرُسْنَا مِنْ حَيْثُ نَحْتَرِسُ وَمِنْ حَيْثُ لاَنَحْتَرِسُ
اَللّٰهُمَّ اسْتُرْنَا مِنْ حَيْثُ نَسْتَتِرُ وَمِنْ حَيْثُ لاَنَسْتَتِرُ اَللّٰهُمَّ
اسْتُرْنَا بِالْغِنَـى وَالْعَافِيَةَ اَللّٰهُمَّ ارْزُقْنَا الْعَافِيَةَ وَدَوَامَ
الْعَافِيَةَ وَارْزُقْنَا الشُّكْرَ عَلَى الْعَافِيَةِ.

நாம் காலை நேரத்தை அடைந்தோம். அல்லாஹ்வின் ஆட்சியும் காலை நேரத்தை அடைந்தது. அல்லாஹ்வே! நிச்சயமாக நாங்கள் உன் அடியார்களாகவும், உன் அடியாரின் புதல்வர்களாகவும் இருக்கின்றோம். நாம் எம்மை எவ்வாறு பாதுகாக்கின்றோமோ, எவ்வாறு பாதுகாக்கத் தவறிவிடுகின்றோமோ அவ்வேளையிலெல்லாம் நீ எங்களைப் பாதுகாப்பாயாக. அல்லாஹ்வே! நாம் எம்மை எவ்வாறு காவல்காக்கின்றோமோ, எவ்வாறு காவல்காக்கத் தவறிவிடுகின்றோமோ அவ்வேளையிலெல்லாம் நீ எங்களைக் காவல் காப்பாயாக. அல்லாஹ்வே! நாம் எமது குறைகளை எவ்வாறு மறைக்கின்றோமோ, எவ்வாறு மறைக்கத் தவறிவிடுகின்றோமோ அவ்வேளையிலெல்லாம் எமது குறைகளை நீ மறைப்பாயாக. செல்வத்தையும் ஆரோக்கியத்தையும் எமக்கு நல்குவாயாக. நிரந்தரமான உடற்சுகத்தையும் வழங்குவாயாக. நீ வழங்கிய உடற்சுகத்துக்காக உனக்கு நன்றிகூறும் தன்மையையும் எமக்கு வழங்குவாயாக.

# تعقيب صلاة الظهر

لاَالٰهَ اِلاَّ اللّٰهُ الْعَظِيْمُ الْحَلِيْمُ لاَالٰهَ اِلاَّ اللّٰهُ رَبُّ الْعَرْشِ الْكَرِيْمِ ، اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعَالَمِيْنَ ، اَللّٰهُمَّ اِنِّى اَسْئَلُكَ مُوْجِبَاتِ رَحْمَتِكَ وَعَزَائِمَ مَغْفِرَتِكَ وَالْغَنِيْمَةَ مِنْ كُلِّ بِرٍّ وَالسَّلاَمَةَ مِنْ كُلِّ اِثْمٍ ، اَللّٰهُمَّ لاَتَدَعْ لِى ذَنْبًا اِلاَّ غَفَرْتَهُ ، وَلاَهَمًّا اِلاَّ فَرَّجْتَهُ ، وَلاَ سُقْمًا اِلاَّ شَفَيْتَهُ ، وَلاَعَيْبًا اِلاَّ سَتَرْتَهُ ، وَلاَ رِزْقًا اِلاَّ بَسَطْتَهُ ، وَلاَ خَوْفًا اِلاَّ آمَنْتَهُ ، وَلاَ سُوْءً اِلاَّ صَرَفْتَهُ ، وَلاَحَاجَةً هِيَ لَكَ رِضًا وَلِيَ فِيْهَا صَلاَحٌ اِلاَّ قَضَيْتَهَا يَاأَرْحَمَ الرَّاحِمِيْنَ آمِيْنَ رَبَّ الْعَالَمِيْنَ .

அன்பும் மகத்துவமும் மிக்க அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரியோன் வேறுயாருமில்லை. அகில உலக இரட்சகனான அல்லாஹ்வுக்கே அனைத்து புகழும். அல்லாஹ்வே! உனது அருளை அவசியமாக்கக் கூடியதையும், உனது மன்னிப்பை உறுதியாக்கக் கூடியதையும், ஒவ்வொரு நன்மையிலிருந்தும் அதிகமாகப் பெற்றுக் கொள்வதையும், ஒவ்வொரு தீங்கிலிருந்தும் ஈடேற்றம் பெறுவதையும் நான் உன்னிடத்தில் கேட்கிறேன். அல்லாஹ்வே! எனது பாவங்களை மன்னிக்காமலும், எனது கஷ்டங்களை நீக்காமலும், எனது நோய்களை சுகப்படுத்தாமலும், எனது குறைகளை மறைக்காமலும், எனது உணவை விஸ்தீரணப்படுத்தாமலும், எனது பயத்தை நீக்காமலும், எனது தீங்கை தட்டிவிடாமலும்,

நீ பொருந்திக் கொள்ளக்கூடியதும், எனக்குப் பயனுள்ளதுமான எனது தேவைகளை நிறைவேற்றாமலும் விட்டுவிடாதே. அருள் புரிவோரிலெல்லாம் மிகச் சிறந்த அருளாளனே! அகில உலக இரட்சகனே! இதனை ஏற்றுக் கொள்வாயாக.

# تعقيب صلاة العصر

اَللّٰهُمَّ اِنِّى اَعُوْذُبِكَ مِنْ نَفْسٍ لاَتَشْبَعُ ، وَمِنْ قَلْبٍ لاَيَخْشَعُ وَمِنْ عِلْمٍ لاَيَنْفَعُ ، وَمِنْ صَلاَةٍ لاَتُرْفَعُ ، وَمِنْ دُعَاءٍ لاَيُسْمَعُ ، اَللّٰهُمَّ اِنِّى اَسْئَلُكَ الْيُسْرَ بَعْدَ الْعُسْرِ ، وَالْفَرَجَ بَعْدَ الْكَرْبِ ، وَالرَّخَاءَ بَعْدَ الشِّدَّةِ ، اَللّٰهُمَّ مَابِنَا مِنْ نِعْمَةٍ فَمِنْكَ لاَاِلٰهَ اِلاَّ اَنْتَ اَسْتَغْفِرُكَ وَاَتُوْبُ اِلَيْكَ .

அல்லாஹ்வே! திருப்தியடையாத ஆன்மாவிலிருந்தும், பயபக்தியற்ற உள்ளத்திலிருந்தும், பயன்தராத அறிவிலிருந்தும், ஏற்றுக்கொள்ளப்படாத தொழுகையிலிருந்தும், செவிமடுக்கப்படாத பிரார்த்தனையிலிருந்தும் நான் உன்னிடம் பாதுகாவல் தேடுகின்றேன். அல்லாஹ்வே! கஷ்டத்திற்குப் பிறகான இலகுநிலையையும், துன்பத்திற்குப் பிறகான இன்பத்தையும், கடினநிலைக்குப் பிறகான மென்மையையும் உன்னிடத்தில் நான் வேண்டுகின்றேன். அல்லாஹ்வே! எம்மிடமுள்ள அருட்கொடைகளெல்லாம் உன்னிடமிருந்து வழங்கப்பட்டவையாகும். உன்னைத் தவிர வணக்கத்திற்குத் தகுதியானவன் வேறு யாருமில்லை. நான் உன்னிடத்திலே பிழைபொறுக்கத் தேடுகின்றேன். பாவமன்னிப்பும் கோருகின்றேன்.

# تعقيب صلاة المغرب

اَللّهُمَّ اِنّى اَسْئَلُكَ مُوْجِبَاتِ رَحْمَتِكَ وَعَزَائِمَ مَغْفِرَتِكَ

وَالنَّجَاةَ مِنَ النَّارِ وَمِنْ كُلِّ بَلِيَّةٍ ، وَالْفَوْزَ بِالْجَنَّةِ

وَالرِّضْوَانَ فِى دَارِ السَّلاَمِ ، وَجِوَارَ نَبِيِّكَ مُحَمَّدٍ عَلَيْهِ

وَآلِهِ السَّلاَمُ ، اَللّهُمَّ مَابِنَا مِنْ نِعْمَةٍ فَمِنْكَ لاَاِلهَ اِلاَّ اَنْتَ

اَسْتَغْفِرُكَ وَاَتُوْبُ اِلَيْكَ .

அல்லாஹ்வே! உனது அருளை அவசியமாக்கக் கூடியதையும், உனது மன்னிப்பை உறுதியாக்கக் கூடியதையும், நரகிலிருந்தும், ஒவ்வொரு சோதனையிலிருந்துமான மீட்சியையும் சுவனத்தின் வெற்றியையும், சாந்தி மிக்க மறுவுலகில் உன் திருப்பொருத்தத்தையும், உனது நபியவர்களுக்குப் பக்கத்திலிருப்பதையும் நான் உன்னிடத்தில் கேட்கிறேன். அல்லாஹ்வே! எம்மிடமுள்ள அருட்கொடைகளெல்லாம் உன்னிடமிருந்து வழங்கப்பட்டவையாகும். உன்னைத் தவிர வணக்கத்திற்குத் தகுதியானவன் வேறு யாருமில்லை. நான் உன்னிடத்திலே பிழைபொறுக்கத் தேடுகின்றேன். பாவமன்னிப்பும் கோருகின்றேன்.

اَللّهُمَّ اِنّى اَسْئَلُكَ بِحَقِّ مُحَمَّدٍ وَآلِ مُحَمَّدٍ عَلَيْكَ ، وَاجْعَلِ

النُّوْرَ فِى بَصَرِى ، وَالْبَصِيْرَةَ فِى دِيْنِى ، وَالْيَقِيْنَ فِى

قَلْبِى ، وَالاِخْلاَصَ فِى عَمَلِى ، وَالسَّلاَمَةَ فِى نَفْسِى

وَالسَّعَةَ فِى رِزْقِى ، وَالشُّكْرَ لَكَ اَبَداً مَا اَبْقَيْتَنِى .

அல்லாஹ்வே! முஹம்மத் நபி (ஸல்) அவர்களதும், அவர்களது குடும்பத்தினரதும் பொருட்டினால் வேண்டுகின்றேன். எனது பார்வையிலே ஒளியையும், எனது மார்க்கத்திலே விளக்கத்தையும், எனது உள்ளத்திலே உறுதியையும், எனது செயலிலே உளத்தூய்மையையும், எனது ஆன்மாவிலே ஈடேற்றத்தையும், எனது உணவிலே விஸ்தீரணத்தையும், நான் இருக்கும் காலமெல்லாம் உனக்கு நன்றி செலுத்தும் நிலையையும் உன்னிடத்திலே நான் இரைஞ்சிக் கேட்கின்றேன்.

## تعقيب صلاة العشاء

اَللّٰهُمَّ اِنِّى اَسْئَلُكَ يَامَنْ لاَتَرَاهُ الْعُيُوْنُ ، وَلاَتُخَالِطُهُ

الظُّنُوْنُ ، وَلاَيَصِفُهُ الْوَاصِفُوْنَ ، يَامَنْ لاَتُغَيِّرُهُ الدُّهُوْرُ ،

وَلاَتُبْلِيْهِ الْاَزْمِنَةُ ، وَلاَتُحِيْلُهُ الْاُمُوْرُ ، يَامَنْ لاَيَذُوْقُ

الْمَوْتُ ، وَلاَيَخَافُ الْفَوْتُ ، يَامَنْ لاَتَضُرُّهُ الذُّنُوْبُ ،

وَلاَتُنْقِصُهُ الْمَغْفِرَةُ ، (وَتَسْأَلُ حَاجَتَكَ) .

அல்லாஹ்வே! கண்களால் பார்க்கப்பட முடியாதவனே! எண்ணங்களில் கலக்காதவனே! வர்ணனையாளர்களால் வர்ணிக்கப்பட முடியாதவனே! காலங்களால் அழிக்கப்பட முடியாதவாறும், எவ்விடயங்களாலும் பிணைக்கப்படாதவாறும் காலத்தால் மாற்றம் செய்யப்படாதிருப்பவனே! மரணத்தை சுகிக்காதவனே! இழப்புகளையிட்டு அச்சம் கொள்ளாதவனே! மனிதர்களின் பாவங்களால் தீங்கிற்கு உள்ளாகாமலும், பாவமன்னிப்பால் குறைவு காணாமலும் இருப்பவனே!
(இதன்பிறகு தேவையானவற்றை கேட்டுக்கொள்ளலாம்)

اَللّهُمَّ كُنْ لِوَلِيِّكَ الْحُجَّةِ بْنِ الْحَسَنِ
صَلَواتُكَ عَلَيْهِ وَعَلى آبائِهِ
فِي هذِهِ السّاعَةِ وَفِي كُلِّ السّاعَةِ
وَلِيًّا وَحافِظًا ، وَقائِدًا وَناصِرًا ، وَدَلِيْلاً وَعَيْنًا ،
حَتّى تُسْكِنَهُ اَرْضَكَ طَوْعًا
وَتُمَتِّعَهُ فِيْهَا طَوِيْلاً

# தொடர்




ريع هذا الكتاب يذهب في اعمال البر

இதில் வரும் இலாபத்தில் புத்தகங்கள் அச்சிடப்படும்

புத்தகங்களை பெற்றுக்கொள்ள www.thohor.com எனும் இணைய தளத்தை தொடர்பு கொள்ளவும்

يمكنكم شراء اصداراتنا عبر موقعنا الالكتروني www.thohor.com

Era of Appearance Foundation
مؤسسة عصر الظهور

E-mail:info@thohor.com
eaf-q8@yahoo.com
www.eaf-q8.com
www.thohor.com
P.O Box 1111 Al-Dasma-Kuwait